09597

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

Department of Examinations, Sri Lanka

5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, AUGUST 2019

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2024 ஓகஸ்ற்

# வினாத்தாள் I

45 நிமிடம்

சுட்டெண் : ................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ※ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- ※ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ※ இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ※ ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான** விடையைத் தெரிவுசெய்து, **அதன் கீழ்க் கோடிடுக.**
- ※ செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| **இறுதிப் புள்ளிகள்** | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன் | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன் | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன் இறுதிப் புள்ளிகள் சரியானவை. | V/I/T/CH |

PAPERMASTER.LK

[பக். 2 ஐப் பார்க்க

பெயர் : ..................................................................

01) பின்வரும் இரண்டு உருக்களையும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள சரியான கூற்று எது?



உரு A




உரு B

(1) உரு A இல் வானம் வரையப்பட்டுள்ள அதே விதத்தில் உரு B இலும் வானம் வரையப்பட்டுள்ளது.

(2) உரு A இல் உள்ள பூக்கள் உரு B இலும் அவ்வாறே காணப்படுகின்றன.

(3) உரு A இல் உள்ள விலங்குகளின் எண்ணிக்கையிலும் பார்க்க உரு B இல் உள்ள விலங்குகளின் எண்ணிக்கை கூடியதாகும்.

02) கீழே உள்ள தாவர இலைகளின் உருவங்கள் அவற்றின் வடிவத்திற்கும் பருமனிற்கும் ஏற்பக் குவியல்களாக வேறுபடுத்தினால் கிடைக்கும் குவியல்களின் எண்ணிக்கை யாது?



(1) 4 (2) 5 (3) 6

03) பின்வரும் வாக்கியத்தில் தடித்த கறுப்பு எழுத்துக்களில் உள்ள சொற்களுக்குப் பதிலாக முறையே இடத்தக்க சொல் தொகுதி யாது?

**விடியற் காலத்தில்** எழுந்து **சோம்பலை முறித்து** முகத்தையும் வாயையும் அலம்பித் துப்புரவாக்கி வெள்ளை ஆடையை அணிந்து பாடசாலைக்கு **அடியெடுத்து வைக்கும்** பிள்ளைகளின் காட்சி அழகானது.

(1) அதிகாலையில் விரைவாக ஓடும்.

(2) காலையில் சோர்வாக போகும்.

(3) அதிகாலையில் சுறுசுறுப்பாக செல்லும்.

04) பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம் பெறும் விடை யாது?

| | | |
|---|---|---|
| ............................ | புத்தகம் | நூலகம் |
| நோயாளி | ............................ | மருத்துவமனை |
| மாணவன் | அறிவு | ............................ |

(1) ஆசிரியர் நோய் வகுப்பறை

(2) மாணவன் பணம் ஆய்வுகூடம்

(3) வாசகன் மருந்து பாடசாலை

PAPERMASTER.LK

05) பின்வரும் கவிதை எதனைப் பற்றி கூறுகின்றது?

ஹோ ஹோ எனச் சத்தமிட்டு
கடலிலிருந்து கரைக்குக் கிளம்பி வந்து
கரையில் நுரைகளை அள்ளி வீசி
மீண்டும் திரும்பிச் செல்லும்

(1) கடல் அலை (2) கடற்கரை (3) கடற்காற்று

06) ஒரு நிகழ்வில் சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a – ஓர் இறைச்சித் துண்டை வாயில் வைத்திருக்கும் வேறொரு நாய் நீரில் இருப்பது போன்று அதற்குத் தோன்றியது.

b – அது மற்றையதன் இறைச்சித் துண்டைப் பறிப்பதற்கு வாயைத் திறந்த போது அதன் இறைச்சித் துண்டு நீரில் விழுந்தது.

c – ஓர் இறைச்சித் துண்டை வாயில் எடுத்த ஒரு நாய் ஒற்றையடிப் பாலத்தின் வழியே சென்றது.


d – பேராசையுள்ள நாய் தன்னிடம் இருந்த இறைச்சித் துண்டையும் இழந்தது.


e – அந்த நாயின் இறைச்சித் துண்டை அது பறிக்க எண்ணியது.


இவற்றின் சரியான ஒழுங்குவரிசை யாது?


(1) c a d e b (2) c a e b d (3) a c e b d

07) பின்வரும் உருக்கோலத்தில் ? இருக்கும் அடைப்பில் வரவேண்டிய உரு யாது?







(1)


(2)



(3)

08) பின்வரும் அடைப்பில் உள்ளவை மிகவும் அர்த்தமுள்ள விதத்தில் காட்டப்பட்டுள்ள உரு யாது?




(1)





(2)





(3)

09) பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ள பெட்டி வெட்டி விரிக்கப்பட்ட பின்னர் காணப்படத்தக்க விதத்தைக் காட்டும் உரு யாது?





(1)



(2)



(3)

PAPERMASTER.LK

10) பின்வரும் உருவிற் காட்டப்பட்டுள்ள திண்மம் அதில் உள்ள முறிந்த கோடு வழியே வெட்டப்பட்டு சமமான இரு பகுதிகளாக வேறுபடுத்தப்பட்டால் கிடைக்கும் வெட்டுமுகத்தின் வடிவம் யாது?





(1)



(2)


(3)

11) பின்வரும் சதுரக்கோட்டுத் தாளையும் A, B, C ஆகிய உருக்களையும் பார்க்க.


சதுரக்கோட்டுத் தாள்


A


B


C

அந்த சதுரக்கோட்டுத் தாளை வெவ்வேறு விதமாகப் பயன்படுத்தி,

(1) A, B, C ஆகிய மூன்று உருக்களையும் வரையலாம்.

(2) A, B ஆகிய இரு உருக்களை மாத்திரம் வரையலாம்.

(3) A, B, C ஆகிய எவ்வுருவையும் வரைய முடியாது.

12) பாத்திமா, மிஷேல், கவிஷ், ராமன் ஆகியோர் நான்கு பிள்ளைகளாவார். மிஷேல் பாத்திமாவிலும் மூத்தவரும் கவிஷவிலும் இளையவரும் ஆவார். ராமன் மிஷேலிலும் இளையவரும் பாத்திமாவிலும் மூத்தவரும் ஆவார். இதற்கேற்ப மூத்த பிள்ளையும் இளைய பிள்ளையும் முறையே யாவர்?

(1) மிஷேலும் ராமனும் (2) கவிஷாவும் பாத்திமாவும் (3) கவிஷாவும் ராமனும்

13) முந்தை நாளுக்கு முந்திய நாள் வெள்ளிக்கிழமை எனின், நாளை மறுதினத்துக்கு அடுத்த நாள் யாது?

(1) செவ்வாய்க்கிழமை (2) புதன்கிழமை (3) வியாழக்கிழமை

14) 5 ஒத்த இயந்திரங்கள் 5 நிமிடங்களில் 5 பொம்மைகளை உற்பத்தி செய்யலாம். அதற்கேற்ப அத்தகைய 100 இயந்திரங்கள் 100 பொம்மைகளை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?

(1) 5 நிமிடங்கள் (2) 20 நிமிடங்கள் (3) 100 நிமிடங்கள்

15) கீதா 20 ரூபாவிற்குச் சில பழைய முத்திரைகளை வாங்கி அதே நாளில் அம்முத்திரைகளை ராணிக்கு 40 ரூபாவிற்கு விற்றாள். அடுத்த நாள் ராணியிடமிருந்து கீதா அம்முத்திரைகள் அனைத்தையும் 60 ரூபாவிற்கு திரும்ப வாங்கினாள். அதன் பின்னர் கீதா அம்முத்திரைகளை 50 ரூபாவிற்கு விற்றால், இக்கொடுக்கல் வாங்கலில் கீதாவிற்கு,

(1) இலாபம் ஏற்படுகின்றது.

(2) நட்டம் ஏற்படுகின்றது.

(3) இலாபமோ நட்டமோ ஏற்படுவதில்லை.

16) தினமும் விடியற்காலத்தில் வானிலை முன்னறிவித்தலுக்குச் செவிமடுக்கும் திரு. சிறிபால மழைபெய்யும் நாட்களில் மாத்திரம் தனது மோட்டர்க் காரில் அலுவலகத்திற்குச் செல்வார். அவர் மழைபெய்யும் ஒவ்வொரு நாளும் தவறாமல் தனது குடையையும் எடுத்துக்கொண்டு செல்வார். அதற்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?

(1) திரு. சிறிபால குடையை எடுத்துக்கொண்டு அலுவலகத்திற்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் தனது மோட்டர்க் காரில் செல்கின்றார்.

PAPERMASTER.LK

(2) திரு. சிறிபால தனது மோட்டர்க் காரில் அலுவலகத்திற்குச் செல்லும் சில நாட்களில் குடையை எடுத்துக் கொண்டு செல்வதில்லை.

(3) திரு. சிறிபால தனது மோட்டர்க் காரில் அலுவலகத்திற்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் குடையை

17) 20 சென்ரிமீற்றர் உயரமுள்ள ஒரு போத்தலில் 8 சென்ரிமீற்றர் உயரத்திற்கு நீர் உள்ளது. இந்நீரின் அளவானது போத்தல் கொள்ளும் நீரின் மொத்த அளவில் அரைவாசியாகும். நீர் வெளியே செல்லாதவாறு மூடியை மூடிப் போத்தலைக் கவிழ்க்கும்போது நீர் மட்டத்தின் உயரம் சென்ரிமீற்றரில் யாது?

(1) 8 (2) 10 (3) 12

18) ஒரு குறித்த மாதத்தில் ஞாயிற்றுக்கிழமைகள் வரும் நாட்களின் எண்களின் கூட்டுத்தொகைக்குக் கிடைக்கத்தக்க பெரிய பெறுமானம் யாது?

(1) 80 (2) 85 (3) 88

19) ஒரு பிள்ளை தனது தாயாரிடம் பின்வருமாறு கேட்கின்றது.

''எனக்கு ஒன்றும் தெரியாமல் இருப்பது நான் கண் தெரியாத சிறுபையனாக இருப்பதாலாம். பெரியவனாகும் போது எனக்குத் தெரியவருமா எனக் கேட்கிறேன்.''


இப்பிள்ளை கேட்கின்றவாறு அவனுக்கு ஏன் தெரிவதில்லை?

(1) குருடாக இருப்பதனால்

(2) பையனாக இருப்பதனால்

(3) சிறியவனாக இருப்பதனால்

20) ஒரு கிராமத்தின் பரும்படிக் கிடைப்படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைப் பற்றிய கூற்றுக்களிடையே **தவறான** கூற்று யாது?






(1) மருந்தகத்திலும் பார்க்க உயர்ந்த இடத்தில் கோயில் உள்ளது.

(2) மைதானத்திற்கு வடக்கே குளம் இருப்பின், பாடசாலைக்கு மேற்கே மருந்தகம் உள்ளது.

(3) அஞ்சல் அலுவலகத்திலிருந்து கோயிலுக்குச் செல்லும்போது குளக்கட்டின் மீதே செல்ல வேண்டும்.


21) A, B ஆகிய இரு பகுதிகளையும் சேர்த்து அமைக்கத்தக்க ஒரு திண்மத்தின் வடிவத்தைக் காட்டும் உரு யாது?



(1) (2) (3)

22) ஒரு முற்றத்தில் வரையப்பட்டுள்ள ஒரு சதுரம் உருவிற் காட்டப்பட்டுள்ளது. அதில் வடக்குத் திசையும் குறிக்கப்பட்டுள்ளது. A, B, C, D ஆகிய நான்கு இடங்களிலும் நிற்கும் நான்கு பிள்ளைகளுக்கிடையே A இல் நிற்கும் பிள்ளையும் C இல் நிற்கும் பிள்ளையும் கிழக்குத் திசையையும், B இல் நிற்கும் பிள்ளையும் D இல் நிற்கும் பிள்ளையும் மேற்குத் திசையை நோக்கியும் நிற்கின்றனர். இவர்களிடையே முகத்திற்கு முகம் நோக்கியிருக்கும் இருவர் நிற்கும் இரு இடங்களும் யாவை?





PAPERMASTER.LK

(1) A உம் B உம் (2) B உம் C உம் (3) C உம் D உம்

30) ஒரு நான்முகியின் நான்கு முகங்களில் ஒரு முகத்தில் ஓர் இலக்கம் வீதம் 1, 2, 3, 4 ஆகிய இலக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள இரு நான்முகிகளை ஒரு மேசை மீது வைக்கும் போது மேசையுடன் தொடுகையுறாத முகங்களின் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 15 ஆகும். மேசையுடன் தொடுகையுறும் இரு முகங்களில் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?

(1) 3 (2) 5 (3) 7

31) ஒரு நிரையில் 12 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் நிற்கும் விதம் பின்வரும் உரு A இல் காட்டப்பட்டுள்ளது. உரு B இல் காட்டியுள்ளவாறு அவர்கள் 1 ஆம் பிள்ளை நடுவில் நிற்கும் விதத்தில் 2 ஆம் பிள்ளை 1 ஆம் பிள்ளையின் இடப்பக்கத்திலும், 3 ஆம் பிள்ளை 1 ஆம் பிள்ளையின் வலப் பக்கத்திலும், 4 ஆம் பிள்ளை 2 ஆம் பிள்ளையின் இடப்பக்கத்திலும் என்றவாறு மாறிமாறி நிற்கின்றனர்.



உரு A



உரு B


அவ்வாறு அவர்கள் நிற்கும்போது 10 ஆம் பிள்ளையின் இரு பக்கங்களிலும் நிற்பவர்கள் யாவர்?

(1) 8 ஆம் பிள்ளையும் 9 ஆம் பிள்ளையும்


(2) 9 ஆம் பிள்ளையும் 11 ஆம் பிள்ளையும்


(3) 10 ஆம் பிள்ளையும் 12 ஆம் பிள்ளையும்


32) முற்பக்கத்திலிருந்து பார்க்கப்படும்போது படலை ஒன்று தோன்றும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.



பிற்பக்கத்திலிருந்து அது பார்க்கப்படும்போது தோன்றும் விதத்தைக் காட்டும் படம் யாது?


(1)


(2)


(3)

33) ஒரு செவ்வக வடிவக் காணி முழுவதும் உள்ளடக்கப்படுமாறு, அடுத்துள்ள இரு நிரல்களுக்கிடையேயும் அடுத்துள்ள இரு நிரைகளுக்கிடையேயும் உள்ள இடைவெளி 3 m வீதம் இருக்குமாறு காணியில் 35 மரங்கள் நடப்பட்டுள்ளன. அவை நடப்பட்டிருக்கும் எல்லையிலிருந்து காணியின் எல்லை வரை 2 m அகலமுள்ள ஒரு பாதை காணியைச் சுற்றி உள்ளது. காணியின் அகலம் யாது?

(1) 14 m (2) 16 m (3) 19 m

34) ஒரு குறித்த நாளில் மூன்று நண்பர்கள் கூறிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கண்ணன் : இன்று சங்கரின் பிறந்த தினமாகும்.

சங்கர் : இல்லை இல்லை இன்று சேகரின் பிறந்த தினமாகும்.

சேகர் : சங்கரின் கூற்று தவறானது.

இவர்களில் ஒருவருடைய கூற்று மாத்திரம் **தவறாகவும்** மூவரில் ஒருவருடைய பிறந்த தினம் மாத்திரம் அத்திகதியில் வருவதாகவும் இருந்தால், அது யாருடைய பிறந்த தினமாகும்?


(1) கண்ணனின் (2) சேகரின் (3) சங்கரின்


PAPERMASTER.LK


35) 43 பிள்ளைகள் உள்ள ஒரு வகுப்பில் பிள்ளைகள் வெவ்வேறாக 7 பெண் பிள்ளைகள் வீதமும் 5 ஆண் பிள்ளைகள் வீதமும் குழுக்களாக்கப்படுகின்றனர். அப்போது எல்லாப் பிள்ளைகளும் குழுக்களாக்கப்பட்டால், எத்தனை பெண் பிள்ளைக் குழுக்கள் இருக்கும்?

(1) 2 (2) 3 (3) 4


36) கூடுதலான பிரதேசம் நிழற்றப்பட்டுள்ள உரு யாது?

(1) 


(2) 


(3) 

37) ஒன்பது பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் கைகோர்த்துக்கொண்டு நிரையில் நிற்கும் ஒரு சந்தர்ப்பத்தில் மூன்று பிள்ளைகள் வீதம் எடுத்த நான்கு உருவச் சட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.


A


B



C


D

ஒன்பது பிள்ளைகளும் நிற்கும் நிரை கிடைக்குமாறு உருவச் சட்டங்கள் வைக்கப்படவேண்டிய ஒழுங்குமுறை யாது?

(1) A B C D (2) B D A C (3) D B C A

38) உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு முழுமையாக நீர் நிரம்பிய பாத்திரம் A இலிருந்து ஒரு குறித்த அளவு நீர் வெற்றாக இருக்கும் பாத்திரம் B இல் இடப்பட்டது. அப்போது ஒவ்வொரு பாத்திரத்திலும் ¾ பகுதியில் நீர் உள்ளது. இவ்வாறு இருப்பதற்கு பாத்திரம் A கொள்ளும் நீரின் அளவு பாத்திரம் B கொள்ளும் நீரின் அளவின் எத்தனை மடங்காக இருத்தல் வேண்டும்?




(1) இரு மடங்கு (2) மும்மடங்கு (3) நான்கு மடங்கு


39) P இல் இருக்கும் எல்லாத் தட்டுகளும் ஒரு தடவைக்கு ஒன்று வீதம் எடுக்கப்பட்டு Q, R ஆகிய பாத்திரங்களில் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு இடப்படுதல் வேண்டும். அவ்வாறு இடும் போது P இலிருந்து வெளியே எடுத்த ஒரு தட்டு பாத்திரம் Q இல் அல்லது பாத்திரம் R இல் இடப்பட்ட பின்னரே அடுத்த தட்டு P இலிருந்து வெளியே எடுக்கப்படுதல் வேண்டும்.




இச்செயன்முறையில் ஒவ்வொரு பாத்திரத்திலும் தட்டுகளை இடும் போது அந்தப் பாத்திரத்தில் மாத்திரம் மூடி திறந்திருத்தல் வேண்டும். அதற்கேற்ப இரு பாத்திரங்களிலும் மூடிகள் திறக்கப்பட வேண்டிய தடவைகளின் **குறைந்தபட்ச** எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 8

40) A, B, M, N என்னும் நான்கு நகரங்களும் அந்நகரங்களுக்கிடையே பேருந்துகள் செலுத்தப்படுவதற்கு எடுக்கும் நேரங்களும் பின்வரும் உருவிற் காட்டப்பட்டுள்ளன.




எந்தவொரு பேருந்தும் நகரம் A இலிருந்து அல்லது நகரம் B இலிருந்து மு.ப. 9.00, 9.30, 10.00, 10.30 என்றவாறு 30 நிமிடங்களுக்கு ஒரு தடவை புறப்படலாம். நகரம் M இலிருந்து மு.ப. 09.05 இற்குப் புறப்பட்ட ஒரு பேருந்தில் பயணத்தை ஆரம்பித்து நகரம் N இற்கு மு.ப. 10.40 இற்கு வரும் பயணி ஒருவர் பயணித்துள்ள பாதையாக இருக்கத்தக்க பாதை யாது?

PAPERMASTER.LK

(1) M → B → A → N (2) M → A → B → N (3) M → B → N

பெயர் : ..................................................................

**01) பின்வரும் உரைப்பகுதியை வாசிக்குக.**

பாரதி மகாவித்தியாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் கண்காட்சி இம்முறையும் மிகவும் விமரிசையாக நடத்தப்பட்டது. பாடசாலையின் ஆரம்பப் பிரிவிலுள்ள அனைவரினதும் ஒத்துழைப்புடன் இந்தக் கண்காட்சி நடத்தப்பட்டதுடன் அதன் ஒழுங்கமைப்புச் செயற்பாடு தரம் ஐந்து மாணவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு வருகை தருமாறு பெற்றோர்களுக்கும் அயலிலுள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

கண்காட்சிப் பொருள்களில் அலங்காரம் முழுமையாக நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. கண்காட்சியில் தீபனும் அவனது நண்பனான அகிலனும் உருவாக்கிய 'ரொபோ' அனைவரது கவனத்தையும் அதிகளவில் ஈர்த்தது. இருவரும் முன்வைத்த இந்த ஆக்கம் முதலிடம் பெற்றுக்கொண்டது. அடுத்த நாள் நடைபெற்ற காலைக் கூட்டத்தின்போது அதிபர் கண்காட்சி, ஒழுங்கமைப்பு, பங்குபற்றல், வெற்றியடைந்தமை என்பவற்றுக்கு மதிப்பளித்து உரையாற்றினார். கூட்டம் முடிவு அடையும்போது வெற்றி பெற்றவர்களுக்கும் பங்குபற்றியவர்களுக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. தமது ஆக்கம் முதலிடம் பெற்றுக்கொண்டதால் அவர்கள் இருவருக்கும் இந்தக் கண்காட்சி வாழ்வில் மறக்க முடியாததொன்றாகி விட்டது.

- **உரைப்பகுதியைக் கருத்தில் கொண்டு விடை எழுதுக.**

(i) கண்காட்சி எந்தப் பாடசாலையில் நடாத்தப்பட்டது? ..................................................................

(ii) கண்காட்சியின் ஒழுங்கமைப்புச் செயற்பாடு யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது?

..................................................................

(iii) தீபனும் அகிலனும் எதனை உருவாக்கியிருந்தனர்?

..................................................................

(iv) கண்காட்சியைப் பார்ப்பதற்கான அழைப்பினைப் பெற்றுக்கொண்டவர்கள் யார்?

..................................................................

(v) தீபனுக்கும் அகிலனுக்கும் இந்தக் கண்காட்சி எக்காரணத்தினால் மறக்கமுடியாததொன்றாகியது?

..................................................................

(vi) 'ஆரம்பம்' என்பதற்கான எதிர்க் கருத்துச் சொல் இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது யாது?

..................................................................

(vii) அடுத்த நாள் நடைபெற்ற காலைக் கூட்டத்தில் அதிபர் எவற்றுக்கு மதிப்பளித்தார்?

..................................................................

**02)** பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் சரியான பயனிலைச் சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து அதன் **கீழே கோடு இடுக.**

(i) வண்ணத்துப் பூச்சி பூக்களில் அமர்ந்து தேனைக் ..................... (குடிக்கின்றது / குடிக்கின்றன)

(ii) மீனவர்கள் அதிகாலையிலேயே கடலுக்குச் ..................... (செல்கின்றன / செல்கின்றனர்)

(iii) மன்றத்தின் சென்ற ஆண்டு அறிக்கையைச் செயலாளர் ..................... (முன்வைத்தார் / முன்வைத்தனர்)

(iv) நந்தினியும் தாரகனும் அகிலனும் நூல் நிலையம் ..................... (சென்றனர் / சென்றார்)

PAPERMASTER.LK

03) பின்வரும் வாக்கியங்களை நிகழ்காலமாக மாற்றி எழுதுக.

(i) மேனகா விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டாள்.

..................................................................................................................................................

(ii) சஞ்சயன் சுற்றாடல் தொடர்பான வினாக்களைக் கேட்டான்.

..................................................................................................................................................

04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் பிழையான எழுத்துக்கூட்டல் உள்ள **இரண்டு** சொற்கள் உள்ளன. அந்தச் **சொற்களை மட்டும்** பிழைதிருத்தி புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) புவியின் மேற்பறப்பில் பல்வேறு தாவரங்கள் வழர்கின்றன.

........................................................................ ........................................................................

(ii) வாணிலை பற்றி நடத்தப்படும் சொற்பொளிவில் அனைவரும் பங்குபற்றுக.

........................................................................ ........................................................................

05) பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

(i) அறிவுறுத்துக / வருகை / தருமாறு / நூல்நிலையத்திற்கு / மாணவர்களுக்கு

..................................................................................................................................................

(ii) கல்லை / வெளியே / செய்து / தள்ளினார்கள் / மனிதர்கள் / பெரு / முயற்சி

..................................................................................................................................................

06) பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியாக மாற்றி எழுதுக.

(i) நான் பாடசாலை செல்வதற்கு ஆயத்தமாகிறன்.

..................................................................................................................................................

(ii) நாங்கள் கதைப்புத்தகம் வாசிக்கிறம்.

..................................................................................................................................................

07) பின்வரும் வாக்கியத்தில் உரிய இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

| |
|---|
| நாங்கள் விவசாயப்பண்ணை ஒன்றை பார்வையிடச் செல்வோம் என்று ஆசிரியை ஆலோசனை கூறினார் |

08) இணைமொழிச் சொற்களைப் பூரணப்படுத்துக.

(i) ஓட்டமும் ..............................................   (ii) அக்கம் ..............................................

09) 'நண்பன்' என்ற சொல்லின் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக. : ..............................................................

10) பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்டுள்ள கட்டத்தினுள் **ஆங்கில** எழுத்துக்களில் எழுதுக.

(i)



| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

(ii)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

11) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக்கி எழுதுக.

PAPERMASTER.LK

(i) am / book / a / reading / I : ..............................................................

(ii) go / everyday / to / We / school : ..............................................................

12) ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லுக்கும் உரிய **தமிழ்ச்சொல்லை** எழுதுக.

(ii) Bottle : ..............................................................

13) 'முகுண (මුහුණ)' என்ற சொல்லுக்குரிய **தமிழ்ச்** சொல்லை எழுதுக. ..........................................................

14) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் **தமிழில்** எழுதுக.

உங்கள் வயது எத்தனை? : ..........................................................................................................

15) பின்வரும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

இருபதாயிரத்து அறுநூற்று முப்பது : ..........................................................................................

16) எண் 5438 இல் இலக்கம் 4 இருக்கும் இடத்தையும் இலக்கம் 4 இனால் வகைக்குறிக்கப்படும் பெறுமானத்தையும் எழுதுக.

..........................................................................................................................................

17) மாணவர் குழு ஒன்றுக்கு மிகவும் விருப்பமான விளையாட்டுக்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




(i) வலைப்பந்தாட்டத்திலும் பார்க்கக் கிரிக்கெற் விளையாட்டை மிகவும் கூடுதலாக விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................


(ii) இங்கு குறிப்பிட்ட மாணவர்களுக்கு மேலதிகமாக உதைப்பந்தாட்டத்தை மிகவும் விரும்பும் 5 மாணவர்களும் இவ்வகுப்பில் இருப்பின், இவ்வகுப்பிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................

18) பின்வரும் அடைப்பிலிருந்து **நான்கு** எண்களைத் தெரிவு செய்து பொது வித்தியாசம் 4 ஆக உள்ள ஓர் எண்கோலத்தை வெற்றிடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| 2 | 10 | 7 |
| 3 | 6 | 14 |

............... , ............... , ............... , ...............

19) 


உருவில் தரப்பட்டுள்ள அளவைச் சாடியில் இருக்கும் நீரின் அளவு யாது?


..........................................................................ml

20) 


தராசில் இருக்கும் உருளைக்கிழங்கின் நிறை கிராமில் எவ்வளவு?

..........................................................................g

21) பின்வரும் நெய்யரியில் 6 அடைப்புகள் நீளமும் 3 அடைப்புகள் அகலமும் உள்ள ஒரு செவ்வக வடிவத்தை வரைக.



PAPERMASTER.LK

22) பின்வரும் உருவில் நிழற்றப்பட்டுள்ள அளவினை ஒரு தசம எண்ணாக எழுதுக.



: ..................................................................

23) அக்கா ஒரு பையை வாங்குவதற்கு ரூபாய். 2500 ஐக் கடைக்குக் கொண்டு சென்றார். பையை வாங்கிய பின்னர் அவரிடம் ரூபாய். 125 எஞ்சியிருந்தது. பையின் விலை யாது?

: ரூபாய்.........................................................

24) பாடசாலை நூலகத்திற்குக் கிடைத்த 420 புத்தகங்கள் நான்கு இறாக்கைகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஓர் இறாக்கையில் அடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

: ..................................................................

25) இரண்டு தென்னந்தோட்டங்களில் உள்ள தென்னைகளிலிருந்து பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகள் முறையே 3875, 4623 ஆகும். அவற்றில் 6500 தேங்காய்கள் விற்கப்பட்டனவெனின், எஞ்சியிருந்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது? : ..................................................................

26) ஒரு பாத்திரத்தில் இருந்த முழுப் பழப் பானமும் ஒரு போத்தலில் 2*l* 250*ml* வீதம் 6 போத்தல்களில் சமமாக நிரப்பப்பட்டன. அப்பாத்திரத்தில் இருந்த பழப்பானத்தின் அளவு யாது?

: .......................... *l* ............................ *ml*

27) ஒருமேடை நாடகத்திற்கு எடுத்த நேரம் 2 மணித்தியாலம் 15 நிமிடங்கள் ஆகும். அது பி.ப. 6.00 இற்கு முடிவடைந்ததெனின், நாடகம் ஆரம்பித்த நேரம் யாது? : ..................................................................

28) பயணி ஒருவர் 16 km தூரத்தில் 14 km 50 m தூரத்தைப் பேருந்திலும் மீதித்தூரத்தை நடந்தும் பயணித்தார். அவர் நடந்து பயணித்த தூரம் யாது? : .......................... km .......................... m

29) 3 kg பருப்பை 250 g வீதம் எத்தனை பைகளில் இடலாம்? : ..................................................................

- **30** தொடக்கம் **59** வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
(1) எஸ். மகிந்த தேரர்
(2) திரு. ஆனந்த சமரக்கோன்
(3) திரு. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா

31) மாணவர் குழு ஒன்று சூழலில் உள்ள சில பிராணிகளை அவதானித்து கால்கள் இருக்கின்றமைக்கும் கால்கள் இல்லாதவைக்கும் ஏற்ப வகைப்படுத்தியது. அப்போது ஒரு வகைக்கு உரிய பிராணிகளாக இருக்கத்தக்கவை
(1) எறும்பு, சிலந்தி, கப்பிமீன் (2) மரவட்டை, தும்பி, மண்புழு (3) நாய், கிளி, பல்லி

32) இலங்கைக்கே உரித்தான 'கொம்பு ஓணான்' ஒரு
(1) முலையூட்டியாகும் (2) நகருயிராகும் (3) பறவையாகும்

33) பிராணிகளும் தாவரங்களும் **ஒன்றுக்கொன்று** பயன்படும் விதத்தை **மிகவும் நன்றாக** விளக்கும் வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
(1) பிராணிகளும் மலமும் சிறுநீரும் தாவரங்களுக்குப் பசளையாக இடப்படுதல்
(2) தாவரங்கள் காரணமாகச் சில பிராணிகளுக்குப் பாதுகாப்பு கிடைத்தல்
(3) சில பிராணிகள் தாவரங்களின் பழங்களை உணவாகக் கொண்டு வித்துக்களை வெவ்வேறு இடங்களில் இடுதல்

34) மண்ணை வளப்படுத்தல், பாதகமான பூச்சிகளை உணவாகக் கொள்ளல், பூக்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவுதல் என்னும் பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலைமைகளை முக்கியமாக மேற்கொள்ளும் பிராணிகள் முறையே
PAPERMASTER.LK
(1) தவளை, ஓணான், தேனீ ஆகும்.
(2) தண்டுக்கோதி, மயிர்கொட்டி, குளவி ஆகும்.
(3) மண்புழு, ஆந்தை, வண்ணத்துப்பூச்சி ஆகும்.


35) பலா, தென்னை, வாழை என்னும் மூன்று தாவரங்களையும் பற்றிய சரியான கூற்று யாது?

(1) வீட்டுத் தளபாடங்களைச் செய்வதற்காக அரிமரங்களைப் பெறுதல்

(2) பிராணிகள் தமது வாழிடங்களைத் தயார் செய்தல்

(3) பலமான ஆணிவேர் மூலம் மண்ணில் ஊன்றிக் கொள்ளல்

36) பின்வரும் உருவில் பூவின் பகுதிகள் காட்டப்பட்டுள்ளன. அதில் A இனால் காட்டப்படுவது யாது?




(1) காம்பு

(2) புல்லி

(3) கேசரம்

37) தண்டுகளின் மூலம் முளைக்கச் செய்யப்படும் தாவரங்களுக்கு ஓர் உதாரணம்,

(1) கங்குன் (2) முள்ளங்கி (3) புடோல்

38) நெற் பயிர்ச்செய்கையிலிருந்து பெறப்படும் விளைச்சலைப் பாதுகாப்பதற்கு **மேற்கொள்ளக்கூடாதது** யாது?

(1) நெல் விளைச்சலைக் குறித்த காலத்தில் அறுவடை செய்தல்

(2) நெல் விளைச்சலைச் சாக்குகளில் இட்டு உலர்ந்த இடத்தில் வைத்தல்

(3) பூச்சிகளினால் ஏற்படுத்தப்படும் சேதத்தைத் தவிர்ப்பதற்கு இரசாயனப் பொருள்களைப் பிரயோகித்தல்

39) பெரிய நீர்த் தேக்கங்களில் அமைக்கப்பட்டுள்ள அணைக்கட்டு பற்றிய சரியான கூற்று யாது?

(1) அணைக்கட்டின் மேற்பகுதியின் அகலம் அடிப்பகுதியிலும் நடுப்பகுதியிலும் பார்க்கப் பெரியது.

(2) அணைக்கட்டின் அடிப்பகுதியின் அகலம் நடுப்பகுதியிலும் மேற்பகுதியிலும் பார்க்கப் பெரியது.

(3) அணைக்கட்டின் நடுப்பகுதியின் அகலம் மேற்பகுதியிலும் அடிப்பகுதியிலும் பார்க்கப் பெரியது.

40) பாய்ந்தோடும் நீரின் மூலம் சுழலச் செய்யத்தக்க நீர்ச் சில்லை **ஆக்கமுடியாதது**

(1) வாழைத் தண்டின் மூலமும் மரத்துண்டின் மூலமும்

(2) ரெஜிபோம் வட்டம், யோக்கட் கரண்டி ஆகியவற்றின் மூலம்

(3) கப்பி, கயிற்றுத்துண்டு ஆகியவற்றின் மூலம்

41) முற்காலத்தில் சேனைப் பயிர்ச்செய்கையினதும் வயல் பயிர்ச்செய்கையினதும் பாதுகாப்புடன் தொடர்புபட்ட மூன்று சந்தர்ப்பங்களைக் குறிப்பிடும் விடை யாது?

(1) நீர்ப்பிசாசு அமைத்தல், வெளி வேலி கொய்தல், தீக்குவியல் மூட்டுதல்

(2) கிலுக்கி அமைத்தல், தடிவேலி அமைத்தல், செக்கு ஆட்டுதல்

(3) முரசறைதல், வெருளி அமைத்தல், சுழலும் தட்டுப் பொருத்துதல்

42) கடற்கரை **இல்லாத** மாகாணங்கள் இரண்டினைக் குறிப்பிடும் விடை யாது?

(1) வடமத்திய மாகாணமும் வடமேல் மாகாணமும்

(2) சபரகமுவ மாகாணமும் கிழக்கு மாகாணமும்

(3) மத்திய மாகாணமும் ஊவா மாகாணமும்

43) கண்பார்வை குறைவடைதலில் எந்த விற்றமின் குறைபாடு கூடுதலாக செல்வாக்குச் செலுத்துகின்றது?

(1) விற்றமின் A (2) விற்றமின் B (3) விற்றமின் C

44) தேசப்படங்களில் 'அதிவேக நெடுஞ்சாலையை' குறிக்கப் பயன்படுத்தப்படும் நிறம் யாது?

(1) கறுப்பு (2) சிவப்பு (3) ஊதா

45) மிளகாய்ச் செடியைப் பயிர்செய்வதற்கு உணவு பொதியிடப்பட்டிருந்த பொலித்தீன் உறையைப் பயன்டுத்துதல்


PAPERMASTER.LK

(1) மீள் சுழற்சிப்படுத்தல் (2) மீளப் பயன்படுத்தல் (3) பயன்பாட்டைக் குறைத்தல்

46) ஒருவரிடமிருந்து வேறொருவருக்குப் பரவத்தக்க நோய் எது?

(1) நீரிழிவு (2) சின்னமுத்து (3) உயர் குருதி அமுக்கம்

47) உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஓர் எளிய பாரந்தூக்கி வடிவில் தயார்செய்யப்பட்ட ஒழுங்கமைப்பின் மூலம் மேலே உயர்த்தக்கூடிய பொருள்




(1) அழிறப்பர்

(2) குண்டூசி

(3) தக்கை அடைப்பான்


48) பின்வருவனவற்றில் பனிக்கட்டியை நெடுங்காலத்திற்கு உருகாமல் வைக்கப்படத்தக்க சந்தர்ப்பம் எது?

(1) ரெஜிபோம் பெட்டியில் இடப்பட்டு மூடிவைக்கப்படுதல்

(2) பிளாஸ்ரிக் பாத்திரத்தில் வைக்கப்படுதல்

(3) நீர்ப் பாத்திரத்தில் வைக்கப்படுதல்

49) ஈரமான பஞ்சுமீது வைக்கப்பட்ட ஒரு பயற்றம் வித்தில் ஏற்பட்ட மாற்றம் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. அதில் A எனக் காட்டப்பட்டிருப்பது யாது?




(1) தண்டு (2) இலை (3) வேர்


50) ஒருவர் தனது தாய்மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியை நன்றாகக் கற்கும்போது கிடைக்கும் அனுகூலம்

(1) இணையத்திலிருந்து அறிவை எளிதாகப் பெறத்தக்கதாக இருக்கின்றமை

(2) அவர் தனது தாய்மொழியில் எழுதப்பட்டுள்ள நூல்களை எளிதாக வாசிக்கத்தக்கதாக இருக்கின்றமை

(3) வேறு எந்த அந்நிய மொழியையும் கற்க வேண்டிய அவசியம் ஏற்படாமை

51) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு மூன்று பாத்திரங்களில் நீலம், மஞ்சள், சிவப்பு என்னும் நீர்ச் சாயங்களின் மூலம் நிறமூட்டிய நீர் சம அளவு வீதம் இடப்பட்டுள்ளது. மூன்று பாத்திரங்களுக்கு இடையிலும் வெள்ளை நிறத் திசுத்தாள் வீதம் ஒரு பாத்திரத்திலிருந்து அடுத்த பாத்திரம் வரைக்கும் இடப்பட்டு ஏறத்தாழ 10 நிமிடங்களுக்குப் பின்னர் பெற்ற அவதானிப்பு,





(1) தாள் A இல் சிவப்பு நிறம் காணப்பட்டது.

(2) தாள் B இல் மஞ்சள் நிறம் காணப்பட்டது.

(3) தாள் C இல் செம்மஞ்சள் நிறம் காணப்பட்டது.

52) சம அளவான நீர் நிரப்பப்பட்டுள்ளன. சமமான மூன்று பாத்திரங்களில் சமமான அளவுள்ள A, B, C என்னும் மூன்று மரக்குற்றிகள் இடப்பட்டபோது தெரியும் விதம் பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளன.





இதற்கமைய இவற்றில் நிறை கூடிய மரக்குற்றி எது?


(1) A (2) B (3) C

53) இரு காந்தத் துண்டுகளை அருகில் வைக்கும்போது அவை இரண்டும் இருக்கத்தக்க விதத்தில் காட்டும் உரு யாது?

PAPERMASTER.LK



**54)** உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஓர் சுற்றைத் தயார்செய்யும்போது அதில்,



(1) இரு குமிழ்களும் ஒளிரும்

(2) ஒரு குமிழ் மாத்திரம் ஒளிரும்

(3) இரு குமிழ்களும் ஒளிரமாட்டா

**55)** டெங்கு நோய் பற்றித் தயாரிக்கப்பட்ட ஒரு சுவரொட்டியில் பின்வரும் கூற்று எழுதப்பட்டிருந்தது. 'டெங்கு நோயை நாமே உருவாக்குகிறோம்.' இதனைச் சரியாக விளக்கும் கூற்று யாது?

(1) வீட்டுத் தோட்டத்தில் நீர் தேங்கியிருக்கும் இடங்களைத் துப்பரவு செய்யாமையால்

(2) திறந்த இடங்களில் உள்ள உணவுகளை உண்கின்றமையால்

(3) டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு உதவுகின்றமையால்

**56)** சந்தேகத்துக்கிடமான ஒரு பொருளைப் பார்க்கும் போது மேற்கொள்ளத்தக்க மிகவும் உகந்த செயல் யாது?

(1) அந்த இடத்திதல் இருந்து விரைவாக வெளியேறுதல்

(2) அந்த இடத்தில் இருந்து விரைவாக வெளியேறி வயதில்மூத்த ஒருவருக்கு அறிவித்தல்

(3) அது என்ன என்று நண்பர்களுடன் சேர்ந்து ஆராய்ந்து பார்த்தல்

**57)** இலங்கையில் பொதுப் போக்குவரத்து சேவைகளில் பார்க்க **முடியாத** ஓர் இயல்பு

(1) ஆண்களுக்கும் பெண்களுக்குமென ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருத்தல்

(2) மதகுருமாருக்காக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருத்தல்

(3) கர்ப்பினித் தாய்மார்களுக்காக ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருத்தல்

**58)** எதிர்காலத்தில் வலுசக்தி குறைவடையும் ஆகையால் அதற்காக மேற்கொள்ளத்தக்க ஒரு தீர்வு

(1) வாகனங்களில் எரிபொருளாகப் பெற்றோலைப் பயன்படுத்தல்

(2) காற்றுச் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்தல்

(3) புகையிரதங்களை இயக்குவதற்கு நிலக்கரியைப் பயன்படுத்தல்

**59)** பல்லாங்குழி விளையாட்டு ஆடப்படுவது

(1) தரையின் மீது வரையப்பட்ட கட்டங்களின் மீது ஆகும்.

(2) பல குழிகள் உள்ள மரப்பலகை மீது ஆகும்.

(3) தாளில் வரையப்பட்ட கட்டங்கள் மீது ஆகும்.

**60)** 'நான் பார்த்த வியத்தகு வானம்' பற்றி விவரிக்கும் **மூன்று** வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இடம்பெறுதல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு, எழுத்துக்கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்.)

01) ..............................................................................................................................

..............................................................................................................................

02) ..............................................................................................................................

..............................................................................................................................

03) ..............................................................................................................................

..............................................................................................................................

PAPERMASTER.LK

***